பாட்டிலில்' இல்லை. சீல்டு பாட்டிலில் வைத்துக் கொடுத்தால் அடல்டிரேஷன் இல்லாமல் சுத்தமாக இருக்கும் அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இப்போது சுகாதார முறையில் பக்குவப்படுத்தி, சுத்தமாகத்தான் விநியோகம் செய்யப்படுகிறது. ஆகவே, சீல்டு பாட்டிலில் வைத்துக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுமா என்பதைப் பரிசீலிக்கலாம்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, உதகையில் தோதவர்கள் காய்ச்சும் நெய் மிகவும் பிரசித்தமானது என்று சொல்லப்படுகிறதே. அதைப்பற்றி அரசாங்கம் ஆராய்ச்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அதைப் பற்றிய தகவல் எனக்குத் தெரியாது.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, நம்முடைய மாதவரம் பால் பண்ணையில் கிடைக்கும் நெய் சென்னை நகரில் மட்டும் விற்பனைச் செய்யப்படுகிறதா அல்லது மற்ற மாவட்டங்களுக்கும் அனுப்பப்படுகிறதா என்ற விவரத்தை அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : சென்னை நகரில் மட்டும்தான் விற்பனைச் செய்யப்படுகிறது.

தியாகராயநகரிலுள்ள சிவா-விஷ்ணு கோயில்

* 375 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை தியாகராயநகரில் உள்ள சிவா-விஷ்ணு ஆலயம் இந்து அறநிலைய போர்டு நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஆம்.

திரு. என். **கிட்டப்பா** : தலைவரவர்களே, இந்த சிவா-விஷ்ணு ஆலயத்தின் சொத்தின் மதிப்பு என்ன ? அங்கு டிரஸ்டிகளாக யார் யார் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் ? கோவில் நிர்வாகப் பொறுப்பில் ஆதித் திராவிடர்கள் அல்லது பார்ப்பனர் அல்லாதவர்கள் இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இந்தக் கோவிலைச் சேர்ந்த சொத்தின் மதிப்பு விபரம் என்னிடம் இல்லை. ஆனால் ஆண்டு வருமானம்—இந்த ஆண்டு வருமானம் ரூ. 19,604. இந்தக் கோவிலுக்கு அறங்காவலர்கள் யாரும் நியமிக்கப்பட வில்லை. சன்மார்க்க சம்வர்த்தினி சபையினர் பரம்பரையாக இந்தக் கோவில் நிர்வாகத்தைக் கவனித்து வருவதாகச் சொல்லப் படுகிறது. தற்சமயம் அவர்கள் தான் அறங்காவலர்களாக இருக் கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, சென்னையிலே இன்னும் பல கோவில்களுக்கு அறங்காவலர்கள் நியமிக்கப்பட வில்லை. பைராகி மடம் என்ற ஒரு பெரிய கோவில் இருக்கிறது. அங்கே இரண்டு வருடங்களுக்கு மேலாக டிரஸ்டிகள் நியமிக்கப் படவில்லை. ஆகவே, உடனடியாக அந்தக் கோவிலுக்கு டிரஸ்டி களை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, ஆண்டு கணக்கில் எந்தக் கோவிலிலும் அறங்காவலர்கள் நியமிக்கப் படாமல் இல்லை. சில கோவில்கள் சம்பந்தமாக வழக்குகள் நீதி மன்றத்தில் இருப்பதினாலோ அல்லது வேறு சில தகராறுகளி னாலோ அறங்காவலர்கள் நியமிக்கப்படாமல் இருக்கலாம். ஆனால் அம்மையார் அவர்கள் குறிப்பிடும் கோவிலில் அறங்காவ லர்கள் நியமிக்கப்படவில்லை என்ற தகவல் தற்போது என்னிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(3) அறிவிப்பு

பேரவை அலுவல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டப் பேரவையின் நடப்புக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி விவரமும், 1972–73-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பிற்காக ஒதுக்கப்பட்ட நாட்களின் விபரமும் ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு அச்சிட்டு அனுப்பியுள்ளவாறு நடைபெறும்.